முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஓடிச் சென்று, கவர்னரிடம் சொல்லி அதை நிறைவேறாமல் செய்தார்கள். இந்த அரசு புதியதாக ஒரு கேபிள் டி.வி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப ஒரு தவறான தகவலை அ.தி.மு.க.வினர் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறவேயில்லை. நான் கவர்னருடைய இல்லத்திற்குச் சென்றது வேறு விஷயத்திற்காகத்தானே தவிர, இதற்கு பெர்மிஷன் கொடுக்கக்கூடாது என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு point of order கேட்டீர்கள். அதற்கு பதில் கிடைத்துவிட்டது. (குறுக்கீடுகள்) Point of order ஆக அது ஒன்றைத்தானே நீங்கள் சொன்னீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்ட பல பிரச்சினைகளில், சட்டம்-ஒழுங்கு பற்றியும் பல உறுப்பினர்கள் இங்கே எழுப்பினார்கள். சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை இல்லாமல் குறிப்பாக நாடு அமைதியாக இருக்கிறதா, சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்படுகிறதா, நிர்வாகம் செயல்படுகிறதா என்ற கேள்வியெல்லாம் comparative கருத்து அடிப்படையில்தான். ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுத்தான் நிலைமையைச் சொல்ல முடியுமே தவிர, தனித்து மதிப்பிட முடியாது. உலகத்தில் எந்த நாட்டிலேயும் கொலை நடக்காமல் இல்லை. எந்த நாட்டிலேயும் கொள்ளை நடக்காமல் இல்லை, எந்த நாட்டிலேயும் திருட்டு நடக்காமல் இல்லை, எந்த நாட்டிலேயும் கற்பழிப்பு நடக்காமல் இல்லை; எல்லா நாட்டிலேயும் சட்டம் இருக்கிறது, எல்லா நாட்டிலேயும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கின்றார்கள். ஆக, அந்த அடிப்படையில் எண்ணிப் பார்த்தால், நம்முடைய நாட்டிலே இந்தச் சட்டம்-ஒழுங்கு